# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC 19/2020 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-9/PW- 7 <br> Name : ஆல்பர்ட் தாமஸ், <br> தலைமை காவலர் <br> Father's/Husband's Name : <br> Nationality : Indian | Village: <br> Age : <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 04/01/2023**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் திருமதி.உஷா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**:

நான் தற்போது அய்யம்பேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08/06/2019 ம் தேதி திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது திருவிடைமருதூர் காவல்நிலைய குற்ற எண்.97/2019 சட்டப்பிரிவுகள் 341,324,506(2)இதச வழக்கில் 3 ம் எதிரி முத்துகிருஷ்ணன் என்பவரை நானும், உதவி ஆய்வாளர் சூர்யா, உதவி ஆய்வாளர் தங்கராஜ் ஆகியோர்கள் தேடி சென்றதில் திருவிடைமருதூர் பேருந்து நிறுத்தம் அருகில் இரவு சுமார் 08.15 மணியளவில் மேற்படி எதிரி 3 அடி நீளமுள்ள முள்ளு குச்சியுடன் நின்று கொண்டிருந்தார். அவரை உதவி ஆய்வாளர் சூர்யா காரணம் கூறி கைது செய்து அவர் வைத்திருந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய முள்ளுகுச்சியை பொதுமக்கள் சாட்சி யாரும் முன்வராததால் என் முன்னிலையிலும், உதவி ஆய்வாளர் தங்கராஜ்

முன்னிலையிலும் ஒரு கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றினார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி முத்துகிருஷ்ணனை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். (**3 ம் எதிரி இன்று ஆஜரில்லை என்பதால் வழக்கறிஞர் தரப்பு குவி.மு.ச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3 ம் எதிரி ஆஜரில்லை என்பதால் சாட்சியால் அவரை அடையாளம் காட்ட இயலவில்லை. அவர் ஆஜரில் இருந்திருந்தால் அடையாளம் காட்டியிருப்பார்.**) தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் குச்சி தான் உதவி ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டதாகும். (**மேற்படி குச்சி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>

பொதுவாக பேருந்து நிறுத்தத்தில் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். அன்றையதினம் இரவு நேரம் என்பதால் கூட்டம் இல்லை. திருவிடைமருதூர் பேருந்து நிறுத்ததில் எப்போதும் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. திருவிடைமருதூர் பேருந்து நிறுத்ததில் இருந்து காவல்நிலையத்திற்கு சுமார் 5 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில், வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரியை எனக்கு தெரியாது என்றாலும், உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் மற்றும் வழகக்கு சொத்து வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**